கிராமமாகும். அந்தக் கிராமத்திற்கு சாலை வசதி இல்லாத காரணத்தினால், நோயாளிகளாக இருந்தாலும், கர்ப்பிணிப் பெண்களாக இருந்தாலும் தொட்டில் கட்டிதான் அவர்களை அங்கிருந்து கீழே இறக்கி வரவேண்டிய ஒரு சூழ்நிலை உள்ளது. அங்கிருந்து கீழேயிருக்கக்கூடிய பெரியசக்கனாலூர் என்ற கிராமத்திலே தாய்க் கடை இருக்கிறது. இது அரசினுடைய விதிமுறைகளுக்குட்பட்டு 5 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது; கடைகளுக்கான கார்டுகளும் இருக்கின்றன. ஆகவே, அந்தக் கிராம மக்கள் பொருட்களை வாங்க வேண்டுமென்று சொன்னால், மேலே காட்டு மலைப் பகுதியிலிருந்து கீழே 5 கிலோ மீட்டர் இறங்கி வந்து, 5 கிலோ மீட்டர் மீண்டும் ஏறுவது என்பது மிகப் பெரிய சிரமமான காரியமாக இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த பெரியசக்கனாலூரில் இருக்கக்கூடிய அந்தக் கடையைப் பிரித்து, அந்த மலைக் கிராமத்திற்கு ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையை உருவாக்கித் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மலைக் கிராமமான, கேக்கல்நத்தம் கிராமத்திற்குப் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கருத்துரு பெறப்பட்டு, விதிகள் பூர்த்தியாகின்ற நிலையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 310, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

310—

கால்நடை மருந்தகம்

*52754—திரு. கே.பி.பி. பாஸ்கர்:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் தொகுதி, வகுரம்பட்டி ஊராட்சி ஒன்றியம், வகுரம்பட்டியில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் தொகுதி, வகுரம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வகுரம்பட்டியிலுள்ள கால்நடை கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஒரு கால்நடை கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று சொன்னால், 5,000 கால்நடை அலகுகள் இருக்கவேண்டுமென்று விதி இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் கிராமத்தில் 5,000–க்கும் மேலாக கால்நடை அலகுகள் இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையினைப் பெற்று, அப்பகுதியிலுள்ள கால்நடை கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர் அவர்கள்.

திரு. கே.பி.பி. பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெற்றியின் இலக்கணம் வீரம் அம்மா; வீரத்தின் இலக்கணம் நீங்கள் அம்மா; கொற்றவரும் போற்றிடும் கோயில் அம்மா; (மேசையைத் தட்டும் ஒலி) மாற்றாரும் வணங்கிடும்

புனிதக் கோட்டை அம்மா; அம்பு இட்டவருக்கு ஆழிப் பேரலை அம்மா; கும்பிட்டவருக்கு குலக் கடவுள் நீங்கள் அம்மா; மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் தொகுதி, வகுரம்பட்டி ஊராட்சி ஒன்றியம், வகுரம்பட்டியிலுள்ள கால்நடை கிளை நிலையத்தை தரமுயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கோடானுகோடி நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், துறை சார்ந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 311, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

311—

வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம்

***35017—திரு. ஆர். சீனிவாசன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆற்காடு தொகுதி, ஆற்காடு வட்டாட்சியர் அலுவலகக் கட்டடத்தினைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆற்காடு வட்டாட்சியர் அலுவலகம் நல்ல நிலையில் உள்ளதால், தற்போது அதனைப் புதுப்பிக்க அவசியம் எழவில்லை. மேலும், ஆற்காடு வட்டாட்சியர் அலுவலகத்தில் தளவாடங்களுடன்கூடிய காத்திருப்போர் அறை, மின் இணைப்பு மற்றும் குடிநீர் வசதிகள் செய்ய மாவட்ட முன்னோக்குத் திட்ட நிதியின்கீழ் ரூ.5,40,000 நிதி ஒதுக்கீடு செய்து, பொதுப் பணித் துறையினர் மூலமாக தேவையான பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆகவே, தற்போது ஆற்காடு